### மக்கள் நலனுக்காக மழை, வெயில், இரவு, பகலென்று பாராமல் உழைக்கும்

# துப்புரவுப் பணியாளர்களின் தேவைகளை நிறைவேற்றும் முதல்வர்!

## முத்தமிழறிஞர் கலைஞரின் ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி
## சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!



சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சரும் கழக இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் துப்புரவுத் தொழிலாளர்களை கவுரவித்து நலஉதவிகள் வழங்கினார்.

**சென்னை, ஆக. 10 -**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஐந்தாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, சென்னை மேற்கு மாவட்டத்தின் சார்பாக, சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த 1,500 துப்புரவுப் பணியாளர்களைக் கௌரவித்து அமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:-**

தமிழ்நாடு முழுக்க எத்தனையோ தொகுதிகளுக்கு, எத்தனையோ மாவட்டங்களுக்கு அரசு நிகழ்ச்சியாக, கழக நிகழ்ச்சியாக பயணம் மேற்கொண்டு கலந்து கொண்டாலும், நம்முடைய சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி தொகுதிக்கு வருவதென்றால் ஒரு தனிச் சிறப்பு. என்னதான் பகல் முழுக்க வெளியில் போனாலும், இரவானால் தங்குவதற்கு வீட்டிற்குப் போய்தான் ஆக வேண்டும். அதுபோன்ற ஒரு நினைப்புதான் இந்தச் சேப்பாக்கம்திருவல்லிகேணி தொகுதிக்கு வரும்போது அந்த நினைப்பு வரும்.

**முத்தமிழறிஞர் வென்ற தொகுதி சேப்பாக்கம்!**

அதைவிடச் சிறப்பு இன்றைக்கு நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய வீட்டிற்கு வந்தது போல ஒரு எண்ணம் எனக்கு வந்திருக்கிறது. ஏனென்றால், இது முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்கள் நின்று, வென்ற சேப்பாக்கம்திருவல்லிகேணி பகுதி இரண்டு முறை இந்தத் தொகுதிக்கு சட்டமன்ற உறுப்பினராக இருந்திருக்கிறார்.

இப்போது இந்தத் தொகுதிக்கு சட்டமன்ற உறுப்பினராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன். அதற்குக் காரணமாக இருப்பது இங்கு அமர்ந்திருக்கக்கூடிய நீங்கள்.

இந்த சேப்பாக்கம்திருவல்லிக்கேணி பகுதியில் பல நூற்றுக் கணக்கான நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். ஆனால், இன்றைக்கு இந்த நிகழ்ச்சி என்னுடைய மனத்திற்கு மிகவும் நெருக்கமான நெகிழ்ச்சியான நிகழ்ச்சி.

**ஏழை - எளிய மக்களுக்கு நாம் வழங்கும் உதவி!**

இந்த நிகழ்ச்சியை நான் ஏன் இவ்வளவு முக்கியமான நிகழ்ச்சி என்று சொல்கிறேன் என்றால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் யாருக்காக உழைத்தாரோ, எந்த அடித்தட்டு ஏழை, எளிய மக்களுக்காக வாழ்நாள் முழுக்க உழைத்தாரோ, அவர்களுக்கு இந்த நலத்திட்ட உதவிகளை நாம் இங்கே வழங்கிக்கொண்டிருக்கின்றோம்.

இந்த நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்த மாவட்டக் கழகச் செயலாளர் சகோதரர் சிற்றரசு அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சென்னை, சென்னையாக இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் இங்கே கூடியிருக்கக்கூடிய தூய்மைப் பணியாளர்களாகிய நீங்கள்தான். நீங்கள் வெறும் தூய்மைப் பணியாளர்கள் மட்டுமல்ல, மனதளவில் மிக, மிகத் தூய்மையான உள்ளம் கொண்டவர்கள்.

இந்தச் சென்னை மாநகரம் நிம்மதியாக மூச்சு விடுகிறது, சுத்தமான காற்றைச் சுவாசிக்கிறது என்றால், அதற்கும் காரணம் தூய்மைப் பணியாளர்களாகிய நீங்கள்தான்.

**இரவு பகலாக உழைக்கும் தூய்மைப் பணியாளர்கள்!**

நாங்களெல்லாம் வெளியூர் சென்றுவிட்டு, வெளிநாடு சென்றுவிட்டு, அதிகாலை 02.00 மணி 03.00 மணியளவில் சென்னையை நோக்கி வந்தோம் என்றால், அங்கே பார்ப்பது உங்களுடைய முகங்களை மட்டும் தான் நான் பார்க்கிறேன். இன்னும் சொல்லப்போனால், இந்த சென்னை மாநகராட்சியில் முதன்முதலில் வேலைக்கு, காலை 2 மணி 3 மணிக்கு வேலைக்குப் போவது யாரென்றால் தூய்மைப் பணியாளர்களாகிய நீங்கள்தான்.

இன்றைக்கு உங்களால்தான் சென்னை, சென்னையாக இருந்து கொண்டிருக்கிறது. எந்தப் பிரதி பலனையும் எதிர்பார்க்காமல் மக்கள் நலனுக்காக வெயில், மழை பார்க்காமல் இரவு பகலாக உழைப்பவர்கள் தூய்மைப் பணியாளர்கள் மட்டும்தான்.

ஒரு குழந்தை எப்படி விளையாடிவிட்டு, வீட்டிற்குச் செல்லும்போது, அதனுடைய தாய் வீட்டிற்குப் போகும் போது, உடம்பு முழுவதும் அழுக்கு இருக்கும். அந்தத் தாய் திட்டாமல் அவனைக் குளிப்பாட்டுவாங்க, அதுமாறி தான் சென்னை என்ற அந்தக் குழந்தையைக் குளிக்கச் செய்கின்ற தாய்தான் இந்தத் தூய்மைப் பணியாளர்களாகிய நீங்கள்.

அப்படிப்பட்ட உங்கள் எல்லோருக்கும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

புயல், மழை, வெள்ளம் போன்ற காலங்களிலும் கொரோனா போன்ற பெருந்தொற்று காலங்களிலும் நீங்கள் ஆற்றிய பணிகளுக்கு ஈடு இணை எதுவும் கிடையாது.

நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் பேசும்போது சொன்னார், நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர் பேசும்போது சொன்னார் கொரோனா பெருந்தொற்று காலத்தின்போது உங்கள் ஒவ்வொருவரையும் நான் நேரில் பார்த்திருக்கேன். அந்த லாக்டவுன் சமயத்தில் மக்கள் யாரும் தெருவில் இல்லை, எல்லாரும் வீட்டில் இருந்தார்கள், எல்லோரும் பயத்தில் இருந்தார்கள்.

**கொரோனா காலத்தில் தூய்மைப் பணியாளர்கள் ஆற்றிய பணி!**

அப்போது நானும், நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழகச் செயலாளர், வட்டக் கழகச் செயலாளர்கள் எல்லாம் ஒவ்வொரு தெருக்களுக்கும் சென்று ஊசி போடுவதற்காக, கேம்ப் நடத்துவோம். அப்போது மக்கள் யாரும் வரமாட்டார்கள். தெருவெல்லாம் வெறிச்சோடிக் கிடக்கும். ஆனால், உங்களை மட்டும்தான் நான் பார்ப்பேன்.

## முத்தமிழறிஞர் கலைஞர் உழைத்ததைப் போன்று ஏழை – எளிய மக்களின் நலனுக்காகப் பாடுபடும் முதல்வர்!

அப்போது நான் சொல்லுவேன். நாம் எப்படி மக்கள் நலனுக்காக உழைத்துக்கொண்டிருக்கிறோமோ, அதைவிட அதிகமாகத் தங்கள் உயிரைப் பணயம் வைத்து, வேலையைச் செய்தது என்றால், இந்தக் கொரோனாவிலிருந்து தமிழகத்தை மீட்டெடுத்ததற்கு முக்கியமான காரணமென்றால், தூய்மைப் பணியாளர்களாகிய நீங்கள்தான் என்று.

> **நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எப்படி உழைத்தார்களோ, அதேபோல அவருடைய வழியில் வந்த நம்முடைய முதலமைச்சர் அவர்களும் உங்களுடைய உயர்வுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார். ஏனென்றால், அடித்தட்டு விளிம்பு நிலையில், உள்ள மக்களுடைய முன்னேற்றம், நம்முடைய திராவிட முன்னேற்ற இயக்கத்தினுடைய இலட்சியம்.**

இப்படிப்பட்ட சேவைகளைச் செய்து வரும் உங்களுடன், நம் முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்களுடைய நினைவு தினத்தை உங்களோடு சேர்ந்து கொண்டாடுவது, நினைவு கூர்வது எனக்கு மிகப்பெரிய பெருமை.

**முத்தமிழறிஞர் கலைஞரைப் போன்று உங்களுக்காக உழைக்கும் முதல்வர்!**

நீங்கள் தினந்தோறும் இந்த மாநகரத்தை எப்படித் தூய்மைபடுத்தி வருகிறீர்களோ, அதேபோலதான், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் பல ஆயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்த மூடநம்பிக்கை, சாதி, மதம், சம்பிரதாயம், சாஸ்திரம் போன்ற குப்பைகளைச் சுத்தப்படுத்தி உங்களுடைய வாழ்வை உயர்த்தி உள்ளார்கள்.

தன் வாழ்க்கை முழுவதும் அடித்தட்டு மக்களுடைய பசியைப் போக்க வேண்டும், அவர்கள் வாழ்வில் மேலே வரவேண்டும் என்று கலைஞர் அவர்கள் உழைத்தார்கள். இன்றைக்கு இந்த இயக்கம் என்றைக்கும் உங்களுக்குப் பக்கபலமாக நிற்கின்ற இயக்கம்.

நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எப்படி உழைத்தார்களோ, அதேபோல அவருடைய வழியில் வந்த நம்முடைய முதலமைச்சர் அவர்களும் உங்களுடைய உயர்வுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார். ஏனென்றால், அடித்தட்டு விளிம்பு நிலையில், உள்ள மக்களுடைய முன்னேற்றம், நம்முடைய திராவிட முன்னேற்ற இயக்கத்தினுடைய இலட்சியம்.

துப்புரவுப் பணியாளர்கள், புனரமைப்பு மற்றும் மறுவாழ்வுத் திட்டம் மூலம் சுமார் 4,000 பேருக்கு நிதியுதவி மற்றும் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திக்கொள்ள நம்முடைய கழக அரசு நிதி வழங்கியது.

**சுய தொழில் தொடங்கவும் உதவிடும் கழக அரசு!**

மனிதக் கழிவுகளை மனிதர்களே அகற்றும் நிலை மாற்றப்பட்டு, அதற்காக தனிச்சட்டத்தை இயற்றியது நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு. அந்தச் சட்டத்தின்படி தூய்மைப் பணியாளர்களுக்கு மாற்று வேலை வாய்ப்பு, சுயதொழில் தொடங்க விரும்புவோர்களுக்கு மாற்று வாழ்வுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன.

19,000 துய்மைப் பணியாளர்கள் மறுவாழ்வுக்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கியது நம்முடைய திராவிட முன்னேற்ற கழக அரசு. ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கொரோனா காலத்தில் நீங்களெல்லாம் முன்களப் பணியாளர்கள் என அறிவித்தது நம்முடைய திராவிட மாடல் அரசு. மேலும் தூய்மைப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு, வீடுகள் கட்டிக் கொடுப்பது என உங்களுக்கு முதலமைச்சர் அவர்கள் தேவையானவற்றையெல்லாம் பார்த்து, பார்த்துச் செய்து கொடுக்கிறார்கள்.

முதலமைச்சர் என இல்லாமல், உங்களில் ஒருவனாக, உங்கள் குடும்பத்தில் ஒருவராக இருந்து உங்களுக்குத் தேவையானவற்றைச் செய்து வருகிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

அண்மையில்கூட, தூய்மைப் பணியாளர்கள் நலவாரிய உறுப்பினர்கள் 500 பேருக்கு ரூபாய் 58 கோடி மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. ஊரகப் பகுதியில் இருக்கக்கூடிய தூய்மைப் பணியாளர்களுடைய மாதாந்திர மதிப்பு ஊதியத்தை ரூபாய்.3,600 லிருந்து ரூபாய் 5,000 ரூபாயாக உயர்த்தி வழங்க நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

**இந்திய ஒன்றியத்திலேயே சிறந்த திட்டத்தை தரும் கழக அரசு!**

தூய்மைப் பணியாளர்களின் நலனுக்காக இந்திய ஒன்றியத்திலேயே இப்படிப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்ற அரசு என்றால், அது நம்முடைய தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசுதான்.

முன்பெல்லாம் காலையில் பணிக்கு வந்துவிட்டு, பள்ளி செல்லும் உங்களுடைய பிள்ளைகளுக்குக் காலை உணவு சமைக்க முடியாமல் நீங்களெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருந்தீர்கள். அதற்கும் தீர்வு கண்டார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

இன்றைக்கு முதலமைச்சருடைய காலைச் சிற்றுண்டித் திட்டம் மூலம் உங்களுடைய கவலை நீங்கியுள்ளது. அரசுப் பள்ளிகளிலே உணவு வழங்கப் படுவதால் நீங்களெல்லாம் நிம்மதியாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல, உங்களுடைய ஊதியத்தில் பெரும் பகுதியைப் பேருந்துப் பயணத்திற்கு நீங்கள் செலவிட்டுக் கொண்டிருந்தீர்கள்.

**கட்டணமில்லாப் பேருந்து மூலம் மகளிர் அடையும் பயன்!**

மகளிருக்குக் கட்டணமில்லாப் பேருந்துப் பயணத் திட்டம் வந்ததால், உங்களுடைய பயணச் செலவு சேமிப்பாக உங்களுக்கு மாறியுள்ளது. மாதந்தோறும் கிட்டத்தட்ட 1,000 ரூபாய் சேமித்துக்கொண்டிருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல, அரசுப் பள்ளியில் படிக்கும் உங்களுடைய பிள்ளைகள், பெண் குழந்தைகள் கல்லூரி செல்லும் போது புதுமைப்பெண் திட்டம் மூலம் ரூ.1,000 ஊக்கத்தொகையாக இந்த அரசு வழங்கிக்கொண்டிருக்கிறது.

நிறையச் செய்திருக்கிறோம், இன்னும் நிறையக் கோரிக்கைகள் வைத்திருக்கிறீர்கள். உங்களிடம் இந்தக் கோரிக்கைகள் இருக்கிறது என்று எனக்கும் தெரியும்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிச்சயம் அந்தக் கோரிக்கைகளை உரிய காலத்தில் பரிசீலனை செய்து, நடவடிக்கை எடுப்பார்கள் என்ற வாக்குறுதியையும் நான் இங்கே அளிக்கின்றேன்.

நீங்கள் தூய்மைப் பணியாளர்கள் மட்டுமல்ல, சென்னை மாநகராட்சி மண்டலம் 5 மண்டலம் 9க்கு உட்பட்ட அலுவலர்கள், செயற்பொறியாளர்கள், உதவிச் செயற்பொறியாளர்கள், சுகாதார அலுவலர்கள், சுகாதார ஆய்வாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருக்கிறீர்கள்.

**பணியாளர்களை ஒருங்கிணைக்கும் அலுவலர்கள்!**

சென்னை பெருநகரக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தினுடைய ஏரியா 5 மற்றும் 9ஐ சேர்ந்த துணைப்பகுதி செயற்பொறியாளர்கள், உதவிச் செயற்பொறியாளர்கள், மின்சார வாரியத்தினுடைய மேற்பார்வைப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள், உதவிச் செயற்பொறியாளர்கள், உதவிப் பொறியாளர்கள் போன்ற அலுவலர்களும் பெருமளவில் இங்கு பங்கேற்றிருக்கிறீர்கள்.

நீங்கள்தான் தூய்மைப் பணியாளர்கள், துப்புரவு ஆய்வாளர்கள் உள்ளிட்ட பணியாளர்களை மிகச் சிறப்பாக ஒருங்கிணைக்கிறீர்கள். உங்களுடைய அந்த ஒருங்கிணைப்பு இல்லாமல் சென்னை இல்லை என்று சொல்கிற அளவிற்குச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறீர்கள்.

உங்களுக்கும் என்னுடைய வாழ்த்துக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த அரசு எல்லோருக்குமான அரசாக, எல்லோருடைய நிறை, குறைகளை அறிந்து திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**முதல்வர் உங்களுக்கு துணை நிற்பார் நீங்கள் அரசுக்கு ஆதரவாக இருங்கள்!**

முதலமைச்சர் அவர்கள் எப்போதும் உங்களுக்கெல்லாம் துணை நிற்பார்கள். அதேபோல், நீங்களும் இந்த அரசிற்கு ஆதரவாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குப் பக்கபலமாக நீங்கள் இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு இந்தச் சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த நம்முடைய மாவட்டக் கழகச் செயலாளர் சிற்றரசு அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே பேசும்போது, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், தமிழகத்திலேயே சிறந்த தொகுதியாக இந்தச் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதி இருக்கிறது என்று சொன்னார்கள். அவர் சொன்னார், என்னுடைய பணிகள்தான் இதற்கு முக்கியமான காரணம் என்று சொன்னார்.

நான் சொல்கின்றேன், என்னுடைய பணிகள் காரணமில்லை, இந்தச் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியை தமிழ்நாடு முழுவதும் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்றால், ஒவ்வொரு தூய்மைப் பணியாளர்களாகிய உங்களுக்குதான் அந்தப் பெருமை உங்களுக்குதான் சேரும் என்று கூறிக்கொண்டு, கலைஞருடைய புகழ் வாழ்க என்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

---

### காஞ்சிபுரம் மாவட்டத்தில்

## கலைஞர் மகளிர் உரிமைத் தொகை இரண்டாம் கட்ட முகாம்!

### மாவட்ட ஆட்சியர் ஆய்வு!

*காஞ்சிபுரம், ஆக. 10 -*

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன் பெற விண்ணப்பம் பதிவு செய்யும் இரண்டாம் கட்ட முகாம்கள் நடைபெறும் இடங்களில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. கலைச்செல்வி மோகன், பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன் பெற விண்ணப்பம் பதிவு செய்யும் இரண்டாம் கட்ட முகாம்கள் நடைபெறும் நேற்று முன்தினம் (8.08.2023) மாவட்ட ஆட்சித்தலைவர் த.கலைச்செல்வி மோகன், பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கலைஞர் உரிமைத் திட்டத்தின் கீழ் மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கப்படும் என அறிவித்திருந்தார்கள். அதன் அடிப்படையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டதில் பயன் பெற விண்ணப்பம் பதிவு முகாம்கள் இரண்டு கட்டமாக நடைபெற்று வருகிறது. முதல் கட்ட முகாம்கள் 24.07.2023 முதல் 04.08.2023 வரையிலும் நடைபெற்று முடிவடைந்த நிலையில், இரண்டாம் கட்ட முகாம்கள் 05.08.2023 முதல் 16.08.2023 வரையிலும் நடைபெற்று வருகிறது. இம்முகாம்கள் காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரையிலும், பிற்பகல் 2.00 மணி முதல் 5.30 மணி வரையிலும் நடைபெற உள்ளது.

காஞ்சிபுரம் மாநகராட்சிக்குட்பட்ட ஓரிக்கை அரசு ஆதிதிராவிட நல ஆரம்ப பள்ளியில் நடைபெற்று வரும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட பயனாளிகளின் விண்ணப்பங்களை பதிவு செய்யும் முகாமினையும், பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் நடைபெற்று வரும் பயனாளிகளின் விண்ணப்பங்களை பதிவு செய்யும் முகாமினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டு, ஆய்வு செய்து, முகாம்களில் அடிப்படை வசதிகளான குடிநீர், மின்சாரம், இணையதளம், கழிப்பறை, பொதுமக்கள் அமர்வதற்கான இருக்கைகள் உள்ளனவா என ஆய்வு மேற்கொண்டார்கள்.

இதனை தொடர்ந்து பெரியார் நகர் பகுதியில் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடையில் ஆய்வு மேற்கொண்டு, பொருட்கள் இருப்பு நிலவரத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கேட்டறிந்தார்கள்.

இவ்ஆய்வின் போது காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளர் க.கண்ணன், குடிமைப்பொருள் தனி வட்டாட்சியர் திருமதி.இந்துமதி ஆகியோர் கலந்து கொண்டனர்.



துறையூர் பாலக்கரையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு நினைவஞ்சலி ஊர்வலத்தை வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், ஸ்டாலின் குமார் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தனர்.